**News:** Free stationeries were given to 1,300 orphan school students by Sairam Institutions.

**Newspaper: Dinamani published : 11/6/16**

தினமணி - 11/6/16 P.No. 3

# சாய்ராம் பொறியியல் கல்லூரியில் 1,300 மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்

தாம்பரம் அருகே 1ஆ சென்னை மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் 1,300 ஆதரவற்ற பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் விஜோமுத்து முதலாண்டு நினைவேந்தல் அவரது சேவைக்கான அடிக்கல் நாட்டு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

மறைந்த விஜோ முத்துவின் கல்விச் சமூக நலப்பணிகளை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன், ஆர்.எம்.கே.கல்விக் குழுமத் தலைவர் முனிரத்தினம், தொடக்கல்விக் குழுமத் தலைவர் பொன்னியின் செல்வன், ஆகாஷ் கல்விக் குழுமத் தலைவர் ஆகாஷ் பாஸ்கரன் ஆகியோர் புகழாரம் சூட்டி பேசினர்.

நிகழ்ச்சியில் அரசு கல்வி அறக்கட்டளை நிர்வாகி ஜெயஸ்ரீ பேசியதாவது:

அரசு அறக்கட்டளை சார்பில் ஆண்டுதோறும் தேர்வு செய்யப்படும் அரசுப் பள்ளிகளில்

பயிற்சி நிறைவுற்ற மாணவர்களுக்கு பொறியியல் கல்வி உள்ளிட்ட அனைத்து வாய்ப்புகளும் சாய்ராம் கல்வி நிறுவனம் இலவசமாக வழங்கி ஆதரித்து வருகிறது.

தற்போது எங்கள் அறக்கட்டளை தொடங்கியுள்ள கல்வி தொழில் பயிற்சி மையத்திற்கு இடம் தந்த உதவியாளர் மறைந்த விஜோ முத்துவிடம் கோரிக்கை வைத்தோம். எங்கள் கோரிக்கையை ஏற்று மதுராந்தகத்தில் திகம்பரு சாலை அருகில் ஒரு ஏக்கர் நிலத்தை அன்பளிப்பாக வழங்கி பிரமிக்க வைத்த மாமனிதர் விஜோமுத்து என்று தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் தலைவர் எஸ்.ஜெ.அருள்மணியின் முன்னாள் உதவியாளரும், விஜ்ஞானியுமான பொன்னாத்துரை பேசியபோது: பொறியியல் பட்டதாரிகள் வியாசர், நகர்ப்புற வளர்ச்சி, மின் உற்பத்தி அதிக தொழில்களில் புதிய கல்வி நிறுவனங்களை உருவாக்க உதவும் புதுமை படைப்பு மையம் தொடங்க சாய்ராம் கல்வி நிறுவனம் முதல்முதலாக ரூ.25 லட்சம் வழங்கி வரவேற்கத்தக்கது என்றார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீசாய்ராம் கல்விக் குழுமத் தலைவர் காலஞ்சென்ற விஜோமுத்து தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் விஜோமுத்து, ரேவதி விஜோ முத்து, கல்வி அறக்கட்டளை உறுப்பினர் டாக்டர் பிரேமா ராதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சாய்ராம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விஜோமுத்து முதலாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சியில், ஆதரவற்ற பள்ளிக் குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கிய ஆர்.எம்.கே.கல்வி நிறுவனத் தலைவர் முனிரத்தினம், தொடக்கல்விக் குழுமத் தலைவர் ஏ.காசுரை, மறைந்த அருள் கலாமின் முன்னாள் உதவியாளர் விஞ்ஞானி பொன்னாத்துரை, சாய்ராம் கல்விக் குழும தலைமை செயல் அதிகாரி சாய்பிரகாஷ் விஜோமுத்து உள்ளிட்டோர்.